
தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

நமது தினகனி
NAMADHU DHINA KANI
RNI-TNTAM/2023/88253
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 120 | 4 Pages | 28.11.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 18254 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 120 | 4 பக்கங்கள் | 28.11.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்**
**புன்மை தெரிவா ரகத்து**

**விளக்கம்:**
**கொலைத்தொழிலினராகிய மக்கள் அதன் இழிவை ஆராய்ந்தவரிடத்தில் புலைத்தொழிலுடையவராய்த் தாழ்ந்து தோன்றுவர்.**

# அமெரிக்க சுகாதார மைய இயக்குநராக இந்திய வம்சாவளி பேராசிரியர் நியமனம்: டிரம்ப் அறிவிப்பு



வாஷிங்டன் டி.சி., நவ.28

அமெரிக்காவில் நடந்து முடிந்தஜனாதிபதி தேர்தலில் பெரும்பான்மையான இடங்களை கைப்பற்றி, முன்னாள் ஜனாதிபதியான டொனால்டு டிரம்ப் வெற்றி பெற்றுள்ளார். இதனை தொடர்ந்து, பல்வேறு பதவிகளுக்கான ஆட்களை நியமித்து வருகிறார்.

அந்த வகையில், அமெரிக்காவின் தேசிய சுகாதார மைய இயக்குநராக இந்திய வம்சாவளியை சேர்ந்த ஜெய் பட்டாச்சார்யா என்பவர் நியமனம் செய்யப்படுகிறார் என டிரம்ப் அறிவித்து உள்ளார். அமெரிக்காவை மீண்டும் சுகாதார நாடாக பட்டாச்சார்யா மற்றும் அவருடைய குழுவினர் உருவாக்குவார்கள் என டிரம்ப் சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதுபற்றி டிரம்ப் வெளியிட்ட அறிக்கையில், அமெரிக்காவின் தேசிய சுகாதார மைய இயக்குநராக ஜெய் பட்டாச்சார்யாவை நியமிப்பதில் நான் உற்சாகமடைகிறேன். தேசத்தின் மருத்துவ ஆராய்ச்சி பணியை மேற்கொள்ளவும், சுகாதார மேம்பாடு மற்றும் உயிர்கள் காக்கப்படுதல் ஆகியவற்றில் முக்கியம் வாய்ந்த புதிய கண்டுபிடிப்புகளுக்கான பணியிலும் ராபர்ட் எப். கென்னடி ஜூனியருடன் இணைந்து ஜெய் பணியாற்றுவார் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த அறிவிப்புக்காக டிரம்புக்கு, ஜெய் தன்னுடைய நன்றிகளை தெரிவித்து கொண்டார். ராபர்ட் எப். கென்னடி ஜூனியரை இந்த வாரத்தில், ஜெய் தனிப்பட்ட முறையில் சந்தித்து, தேசிய சுகாதார மையத்தின் உருமாற்றம் பற்றிய தன்னுடைய கருத்துகளை கூறி அவரின் பாராட்டுகளை பெற்றார். இந்த மையத்தின் சீர்திருத்தம் பற்றிய தன்னுடைய தொலைநோக்கு பார்வையை குறிப்பிட்டு, முன்னுரிமை அளித்து மேற்கொள்ள வேண்டிய விசயங்களையும் எடுத்து கூறினார்.

ஜெய் பட்டாச்சார்யா, ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தின் சுகாதார கொள்கைக்கான பேராசிரியராக பணியாற்றி வருகிறார். இவருடைய ஆராய்ச்சி கட்டுரைகள், பொருளாதாரம், புள்ளியியல், சட்டம், மருத்துவம், பொது சுகாதாரம் மற்றும் சுகாதார கொள்கைக்கான பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

அமெரிக்காவில் நெருக்கடியான கொரோனா பெருந்தொற்று காலத்தில் பல முக்கிய கொள்கைகளை வகுத்ததில் முக்கிய பணியாற்றியவர். 1968ம் ஆண்டு கொல்கத்தா நகரில் பிறந்த இவர், ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தில் எம்.டி. மற்றும் பிஎச்.டி. படிப்பையும் முடித்திருக்கிறார்.

டிரம்பின் அமைச்சரவையில், கேரளாவில் இருந்து புலம்பெயர்ந்த இந்திய வம்சாவளியான விவேக் ராமசாமி இடம் பெற்றிருக்கிறார். எலான் மஸ்க்குடன் இணைந்து அவர் பணியாற்றுவார். இதேபோன்று, ஜனநாயக கட்சியை சேர்ந்த முன்னாள் உறுப்பினரான, முதல் இந்து பெண்ணான துளசி கபார்டும் டிரம்ப் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளார்.

# ஜி7 கூட்டம்: அமெரிக்கா, இத்தாலி உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களுடன் மத்திய மந்திரி ஜெய்சங்கர் சந்திப்பு




பியுக்கி, நவ.28

இத்தாலி நாட்டின் பியுக்கி நகரில் ஜி7 வெளியுறவு துறை மந்திரிகளின் கூட்டம் நடைபெறுகிறது. இதில் பங்கேற்பதற்காக, மத்திய வெளியுறவு துறை மந்திரி ஜெய்சங்கர் அந்நாட்டுக்கு சென்றிருக்கிறார். இதேபோன்று, அமெரிக்கா, இத்தாலி உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த வெளியுறவு துறை மந்திரிகளும் அந்நாட்டிற்கு சென்றுள்ளனர்.

இதனை தொடர்ந்து, இத்தாலியின் துணை பிரதமர் மற்றும் வெளியுறவு மந்திரியான ஆன்டனியோ தஜானியை, மத்திய மந்திரி ஜெய்சங்கர் நேரில் சந்தித்து பேசினார். இதுபற்றி எக்ஸ் சமூக ஊடக பதிவில் குறிப்பிட்ட அவர், இத்தாலியின் துணை பிரதமர் மற்றும் வெளியுறவு மந்திரியான ஆன்டனியோ தஜானியுடன் சிறந்த முறையில் சந்திப்பு நடந்தது.

இந்த சந்திப்பில், தொழில் நுட்பம், புதிய கண்டுபிடிப்பு, பசுமை எரிசக்தி, உரம், ரெயில்வே மற்றும் முதலீடுகள் ஆகியவற்றில் உள்ள வாய்ப்புகள் பற்றி விவாதிக்கப்பட்டன. இந்தியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய பொருளாதார வழித்தடம், உக்ரைன் மற்றும் இந்தோபசிபிக் உள்ளிட்ட விவகாரங்களை பற்றிய இரு நாடுகளின் பார்வைகள் பரிமாறி கொள்ளப்பட்டன.

சமீபத்தில் அறிவிக்கப்பட்ட கூட்டு மூலோபாய செயல் திட்டம், எங்களுடைய நடவடிக்கைகளுக்கு வழிகாட்டியாக இருக்கும். 2025ம் ஆண்டிற்கான அவருடைய இந்திய வருகையை நாங்கள் எதிர்பார்த்து இருக்கிறோம் என பதிவிட்டு உள்ளார்.

இதேபோன்று அமெரிக்க வெளியுறவு துறை மந்திரி அந்தோணி பிளிங்கன், மத்திய மந்திரி ஜெய்சங்கர் உடனான சந்திப்பு பற்றிய விரிவான விவரங்களை எக்ஸ் சமூக ஊடக பதிவில் பகிர்ந்து கொண்டார்.

அதில், நாங்கள் இணைந்து பணியாற்றும்போது அமெரிக்காவும், இந்தியாவும் வலிமையாக இருக்கும். இத்தாலியில் மத்திய மந்திரி ஜெய்சங்கரும், நானும் சந்தித்து பேசினோம். உலகளாவிய பாதுகாப்பு மற்றும் வளம் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கு நெருங்கிய ஒத்துழைப்புடன் தொடர்ந்து பணியாற்ற வேண்டியதன் அவசியம் பற்றி நாங்கள் ஆலோசனை மேற்கொண்டோம் என்று அவர் தெரிவித்து உள்ளார். இதேபோன்று, தென்கொரிய வெளியுறவு துறை மந்திரி சோ டேயுல் மற்றும் ஜப்பான் வெளியுறவு துறை மந்திரி தகேஷி இவாயா ஆகியோரை மத்திய மந்திரி ஜெய்சங்கர் நேரில் சந்தித்து பேசினார்.

# கனமழை முன்னெச்சரிக்கை: நிவாரண முகாம்களை தயார் நிலையில் வைத்திருக்க முதல்அமைச்சர் அறிவுறுத்தல்

சென்னை, நவ.28

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் அதிகன மழை வரை பெய்யக்கூடும் என்ற இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து கனமழையினை எதிர்கொள்ள டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் இன்று (26.11.2024) தலைமைச் செயலகத்தில், ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் காணொலிக் காட்சி வாயிலாக மயிலாடுதுறை, விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்ட கலெக்டர்கள் கலந்து கொண்டனர். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழ்நாடு முதல்அமைச்சர் உத்தரவின்படி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து ஆயத்த நடவடிக்கைகளை இந்திய ஆட்சிப் பணி நிலையிலான மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர். இக்கூட்டத்தின்போது, தமிழ்நாடு முதல்அமைச்சர், அதிகனமழை எச்சரிக்கை வரப்பெற்ற மாவட்டங்களான மயிலாடுதுறை, விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்ட கலெக்டர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களுடன் காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு அம்மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த மாவட்டங்களில் போதுமான நிவாரண முகாம்கள் தயார் நிலையில் உள்ளதோடு, பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளுக்கென பல்துறை மண்டலக் குழுக்கள், மருத்துவக் குழுக்கள் மற்றும் தேவையான உபகரணங்கள் கண்டறியப்பட்டு தயார் நிலையில் உள்ளன என்று இந்த ஆய்வின்போது மாவட்ட கலெக்டர்கள் தெரிவித்தனர். குறிப்பாக, அதிக மழைப்பொழிவினை பெற்றுவரும் நாகப்பட்டினம் மாவட்டத்தில், 125 JCB இயந்திரங்கள், 75 படகுகள், 250 ஜெனரேட்டர்கள், 281 மர அறுப்பான்கள்; கடலூர் மாவட்டத்தில் 242 JCB இயந்திரங்கள், 51 படகுகள், 28 ஜெனரேட்டர்கள், 104 மர அறுப்பான்கள், 58 மோட்டார் பம்புகள்; மயிலாடுதுறை மாவட்டத்தில், 85 JCB இயந்திரங்கள், 70 படகுகள், 164 ஜெனரேட்டர்கள், 57 மர அறுப்பான்கள், 34 மோட்டார் பம்புகள்; திருவாரூர் மாவட்டத்தில் 125 JCB இயந்திரங்கள், 18 படகுகள், 142 ஜெனரேட்டர்கள், 73 மர அறுப்பான்கள், 18 மோட்டார் பம்புகள்; தஞ்சாவூர் மாவட்டத்தில் 59 JCB இயந்திரங்கள், 29 படகுகள், 69 ஜெனரேட்டர்கள், 711 மர அறுப்பான்கள், 42 மோட்டார் பம்புகள் ஆகியவை தயார் நிலையில் உள்ளன என்று மாவட்ட கலெக்டர்கள் தெரிவித்தனர்.



தமிழ்நாடு முதல்அமைச்சர் உத்தரவின்படி முன்னெச்சரிக்கையாக திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், கடலூர் ஆகிய மாவட்டங்களுக்கு தலா ஒரு தேசிய பேரிடர் மீட்பு படை குழுவும், மாநில பேரிடர் மீட்புப் படை குழுவும் விரைந்துள்ளனர். தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 2 தேசிய பேரிடர் மீட்புப் படை குழுவும் விரைந்துள்ளது. மேலும், மேற்படி மாவட்டங்களில் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண பணிகளுக்கு முதல்நிலை மீட்பாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

ஏற்கெனவே, மீனவர்கள் கடலுக்கு செல்வதை தடுக்க அறிவுரை வழங்கப்பட்டு பெரும்பான்மை படகுகள் கரை திரும்பியுள்ளன. ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்றுள்ள படகுகள் அருகில் உள்ள துறைமுகங்களுக்கு செல்ல நவீன தொலைத்தொடர்பு சாதனங்களுடன் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. மாநில மற்றும் மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையங்கள் பல்துறை அலுவலர்களுடன் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் முதல்அமைச்சர், நிவாரண முகாம்களை அனைத்து வசதிகளுடன் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும், கனமழையின்போது பொதுமக்களை தாழ்வான பகுதிகளிலிருந்து முன்கூட்டியே நிவாரண முகாம்களுக்கு அழைத்து வரவேண்டும் என்றும், வெள்ளநீர் தேங்கி பயிர்கள் சேதமடையாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், மின்சார வசதி தடையின்றி கிடைத்திட தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் பெ.அமுதா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவன மேலாண்மை இயக்குநர் நந்தகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாசரேத் மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியில் திருவள்ளுவர் குறித்த கட்டுரை போட்டி

நாமக்கல், நவ.28

நாசரேத் மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியில் திருவள்ளுவர் மற்றும் திருக்குறள் குறித்த வட்டார அளவிலான கட்டுரைப் போட்டிகள் நடைபெற்றது. குமரி கடலில் நிறுவப்பட்டுள்ள திருவள்ளுவரின் 133 அடி உயர சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெற இருப்பதை முன்னிட்டு தமிழ் நாடு முழுவதும் நடைபெறுகின்ற பள்ளி மாணவர்களுக்கிடையேயான கட்டுரைப் போட்டிகளின் ஒரு பகுதியாக, தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி வட்டார அளவிலான கட்டுரைப் போட்டிகள் நடைபெற்றன. அய்யன் திருவள்ளுவரின் அடி தொடர சூளுரைப்போம், எனக்குப் பிடித்த திருக்குறள் ஆகிய இரண்டு தலைப்புகளில் மாணவர்கள் ஏதேனும் ஒரு தலைப்பில் கட்டுரை எழுதும் வகையில் போட்டிகள் நடைபெற்றது. 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை ஒரு பிரிவாகவும், 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை ஒரு பிரிவாகவும் கட்டுரைப் போட்டிகள் தனித்தனியாக நடைபெற்றன. தலைமை ஆசிரியர் குணசீலராஜ் தலைமை தாங்கினார். தமிழ் ஆசிரியர் ஆபிரகாம் இமானுவேல் முன்னிலை வகித்தார். தமிழ் ஆசிரியர் அம்புரோஸ் சுகிர்தராஜ் வரவேற்றார். தமிழ் ஆசிரியர் வின்ஸ்டன் ஜோஸ்வா போட்டிகளுக்கான விதிமுறைகளை விரிவாக மாணவர்களுக்கு எடுத்துகூறினார். அதனைத் தொடர்ந்து தலைமை ஆசிரியர் குணசீலராஜ் கட்டுரைப் போட்டிகளை துவக்கி வைத்தார். போட்டிகளில், ஆழ்வார்திருநகரி வட்டாரத்தைச் சார்ந்த காமராஜ் மேல்நிலைப்பள்ளி நாலுமாவடி, புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளி புன்னைக்காயல், தூய மாற்கு மேல்நிலைப்பள்ளி மூக்குபீறி, இந்து மேல்நிலைப்பள்ளி ஆழ்வார் திருநகரி, தூய யோவான் பெண்கள் மேல்நிலைப்பள்ளி நாசரேத், எஸ் எஸ் என் மேல்நிலைப்பள்ளி ஆத்தூர், மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளி நாசரேத் ஆகிய பள்ளிகளைச்சார்ந்த மாணவ, மாணவிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தமிழ் ஆசிரியர் எட்வின் நன்றி கூறினார். நிகழ்ச்சியில், மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியின் பட்டதாரி தமிழ் ஆசிரியைகள் செல்வம் ஜெபசீலி, ரூபி பொற்செல்வி மற்றும் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியைகள் கலந்து கொண்டனர். போட்டிகளுக்கான ஏற்பாடுகளை தாளாளர் சுதாகர் வழிகாட்டுதலின்படி இயற்பியல் ஆசிரியர் ஜெர்சோம் ஜெபராஜ், பிற ஆசிரியர்கள், ஆசிரியைகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் செய்திருந்தனர்.

# நாசரேத் மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியில் என்சிசி சார்பில் மரக்கன்று நடும் விழா

நாசரேத், நவ.28

நாசரேத் மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியின் என்சிசி சார்பில் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது. தலைமை ஆசிரியர் குணசீலராஜ் தலைமை வகித்தார். என்சிசி அலுவலர் சுஜித் செலவசுந்தர் வரவேற்றார். தூத்துக்குடி நாசரேத் திருமண்டல சுற்றுச்சூழல் கரிசனத் துறையின் இயக்குனரும், திருமுறையூர் சேகர குருவானவருமான கனம்.ஜாண் சாமுவேல் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் பேசுகையில், என்சிசி மாணவர்கள் இயற்கையை காப்பதிலும், மரக்கன்றுகளை வளர்ப்பதிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். என்சிசி தரைப் படை பிரிவு மாணவர்களுக்கு ஒரு வீரர், ஒரு மரம் என்ற செயல் திட்டத்தின் அடிப்படையில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன.




நிகழ்ச்சியில் என்சிசி மாணவர்கள், விவசாய பிரிவு தொழிற்கல்வி ஆசிரியர் ஜெய்சன் பாபு மற்றும் தேசிய பசுமை படை பொறுப்பாளர் அம்புரோஸ் சுகிர்தராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தாளாளர் சுதாகர் வழிகாட்டுதலின்படி, இயற்பியல் ஆசிரியர் ஜெர்சோம் ஜெபராஜ், பிற ஆசிரியர்கள், ஆசிரியைகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் செய்திருந்தனர்.

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா




இராமநாதபுரம், நவ.28

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மேற்கு ஒன்றியம், காரான் ஊராட்சி, சேதுநகர் கிளை கழகத்தின் சார்பில் ஜி.பி. உதயமூர்த்தி ஏற்பாட்டில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்தநாளை முன்னிட்டு வாலாந்தரவையில் அமைந்துள்ள செஸ்ட் இன்முதியோர்பராமரிப்பு இல்லத்தில் காலை உணவு வழங்கப்பட்டது. இதில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் தண்டபாணி சிவலிங்கம், மாவட்ட பிரதிநிதி முருக பூபதி, வாலாந்தரவை ஊராட்சி மன்ற தலைவர் பூரணவேல், அயலகஅணி மாவட்ட துணை அமைப்பாளர் மஹாதீர், வழுதூர் பஞ்சு, சேதுநகர் வேலாயுதம் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




தமிழகத்தின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் 47வது பிறந்தநாள் விழா கோவை 35 வது வட்டக் கழகத்தில் பொதுமக்களின் சார்பாகவும் கழக முன்னோடி கள் சார்பாகவும் எனது சார்பாகவும் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

# மறைமலை அடிகளார் பேத்திக்கு ரூ.1 லட்சம் நிதியுதவி எடப்பாடி பழனிசாமி

சென்னை, நவ.28

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

புகழ் பெற்ற தமிழறிஞரும், 'தமிழ் தந்தை' என போற்றப்படுபவருமான மறைமலை அடிகளார் பேத்தியும், பட்டதாரியுமான லலிதா தனது கணவர் மற்றும் இரண்டு குழந்தைகளுடன் தஞ்சாவூர், கீழவாசல், டபீர்குளம் பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வருவதாகவும், வீட்டு வாடகை கொடுப்பதற்குக் கூட போதிய வருமானம் இல்லாமல் மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து வருவதாகவும் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஏழை, எளிய மக்களுடைய நலனில் மிகுந்த அக்கறை கொண்டு செயல்பட்டு வரும் மாபெரும் பேரியக்கமாகும். அந்த வகையில், 'தமிழ் தந்தை' மறைமலை அடிகளார் பேத்தி லலிதா குடும்பத்திற்கு, அ.தி.மு.க. சார்பில், குடும்ப நல நிதியுதவியாக ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# ஆவின் பாலகங்களை 24 மணி நேரமும் இயக்க தமிழக அரசு நடவடிக்கை



சென்னை, நவ.28

வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாளை புயலாக வலுப்பெறுகிறது. இந்த புயலுக்கு சவுதி அரேபியா பரிந்துரைத்த 'Fengal' என்ற பெயர் சூட்டப்பட்ட உள்ளது.


இதனிடையே இந்த Fengal புயல் இலங்கை கடற்கரையை தொட்டபடி தமிழ் நாட்டி நோக்கி நகருவதால் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் இன்று முதல் 3 நாட்களுக்கு மிக கனமழை பெய்யும் எனவும் 1220 செ.மீ. வரை மழை பெய்ய வாய்ப்புள்ளதால் 4 மாவட்டங்களுக்கு 3 நாட்களுக்கு ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கனமழையை கருத்தில் கொண்டு சென்னையில் 24 மணிநேரமும் ஆவின் சேவை இயங்கும் என அரசு தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் அனைவருக்கும் தங்குதடையின்றி ஆவின் பால் விநியோகம் செய்யப்படும் என்றும் அதிகபட்சமாக ஒருவர் 4 பால் பாக்கெட்டுகள் வரை பெற்றுக்கொள்ளலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் தற்காலிக விற்பனை நிலையம் அமைத்து ஆவின் பால் பவுடர் மற்றும் பால் விநியோகக்கப்படும்.

அண்ணாநகர் டவர், மாதவரம் பால்பண்ணை, வண்ணாந்துரை, பெசன்ட் நகர், வசந்தம் காலனி, அண்ணாநகர் கிழக்கு, சோழிங்கநல்லூர் பால் பண்ணை, விருகம்பாக்கம், சி.பி. இராமசாமி சாலை ஆகிய 8 கடைகளில் சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வி.சி.க.விற்கு, த.வெ.க. தலைவர் தூண்டில் போடுகிறார் ஷா நவாஸ்



சீர்காழி, நவ.28

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சீர்காழி சட்டமன்ற தொகுதி நிர்வாக சீரமைப்பு கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட செயலாளர் தாமு.இனியவன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் மேலிட பொறுப்பாளரும், நாகை தொகுதி எம்.எல்.ஏ.வுமான ஷா நவாஸ் பங்கேற்று பேசினார் அப்போது அவர் கூறுகையில்:

கட்சியை மறுசீரமைத்து அதை உயிரோட்டமாக உயிர்ப்போடு வைத்திருப்பதில் முனைப்போடு இருப்பவர் நமது வி.சி.க. தலைவர் திருமாவளவன். மறு சீரமைப்பு நடவடிக்கையால் தான் தலித் அல்லாதவர்கள் இக்கட்சியில் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்று வேளச்சேரி தீர்மானம் அடிப்படையில் முடிவெடுக்கப்பட்டது. பொதுமக்கள் வாக்களித்து இது பொது கட்சிதான் என அங்கீகரித்துள்ளனர்.

அதன் விளைவாக தான் இன்று 2 எம்.பி.க்கள், 4 எம்.எல்.ஏ.க்கள், கடலூரில் துணை மேயர் மற்றும் பல்வேறு நகராட்சி, ஊராட்சிகளில் உறுப்பினர்கள் என மிகப்பெரிய கட்சியாக வி.சி.க. வடிவம் பெற்றுள்ளது. விடுதலை சிறுத்தைகள் கட்சி இல்லாமல் ஒரு நாள் கூட அரசியல் விவாதங்கள் நடைபெறுவதில்லை. விடுதலை சிறுத்தைகள் கட்சி இந்த கூட்டணியில் தொடர போகிறதா? அந்த கூட்டணிக்கு போகபோகிறதா? என்று தான் அரசியல் வட்டாரங்கள் பேசி கொண்டுள்ளனர்.

வி.சி.க. தலைவர் திருமாவளவன் எடுக்கும் நிலைப்பாட்டை நாடே எதிர்பார்த்து காத்துக் கொண்டிருப்பதாக அ.தி.மு.க. கூறுகிறது. திருமாவளவன் அரசியல் சூப்பர் ஸ்டார் ஆகிவிட்டார். திருமாவளவன் எடுக்கும் நிலைப்பாடு தான் இன்று அரசியலையே தீர்மானிக்க போகிறது என்ற நிலைக்கு வி.சி.க. வளர்ந்துள்ளது. புதிதாக வரக்கூடிய கட்சிகளும் யாரை எதிர்பார்க்கிறார்களோ, இல்லையோ விடுதலை சிறுத்தைகள் கட்சியை எதிர்பார்க்கின்றனர்.

விக்கிரவாண்டியில் மிகப்பெரிய மாநாட்டை நடத்திய த.வெ.க. தலைவர் விஜய், கட்சி தூண்டிலை யாருக்கு போடுகிறார்கள் என்றால் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு தான்.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் பால அறவாழி, பரசு முருகையன், மாவட்ட செய்தி தொடர்பாளர் தேவா, தங்க மணிமாறன் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




புதிதாக தேர்வு செய்யப்பட்ட 97 இரண்டாம் நிலை காவலர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கி வாழ்த்து தெரிவித்த மாவட்ட எஸ்பி சுந்தரவ தனம் பேசும்போது: காவல்துறையில் பணியாற்றுவது பொதுமக்களுடன் நேரடி தொடர்பில் இருக்கும் ஒரு உன்னதமான பணியாகும், ஒழுக்கமாகவும், நேர்மையாகவும், சேவை மனப்பான்மையுடனும் சிறப்பாக பணியாற்ற வேண்டும், சைபர் குற்றங்கள் பற்றிய அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும், பயிற்சியை நல்லமுறையில் முடித்து சிறந்த காவலராக திகழவேண்டும் என்று அறிவுரைகள் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

### மாணவ மாணவிகளை தரைக்குறைவாக ஆசிரியை பேசியதாக குற்றச்சாட்டு

# தட்டி கேட்ட பெற்றோர்களையும் பேசியதால் பெற்றோர்கள் பள்ளியை முற்றுகை

## மாணவிகளுக்கு வழங்கப்படும் நேப்கின், சத்துணவு முட்டைகள், பள்ளி ஆசிரியர்கள் திருடி விற்பதாக அடுக்கடுக்கான புகார்



ராசிபுரம், நவ.28

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட அணைப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சாந்தி என்ற ஆசிரியரை சில மாணவ மாணவிகளை தகாத வார்த்தைகளால் தரக்குறைவாக பேசியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இது குறித்து மாணவியின் பெற்றோர்கள் பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் புகார் அளித்த நிலையில், பெற்றோர்களையும் சம்பந்தப்பட்ட ஆசிரியர் சாந்தி தரக்குறைவாக பேசியதாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரம் அடைந்த பெற்றோர்கள் பள்ளியை முற்றுகையிட்டு தலைமை ஆசிரியரிடம், சம்பந்தப்பட்ட ஆசிரியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர். தலைமை ஆசிரியரின் புகாரின் அடிப்படையில் பள்ளிக்கு வந்த வட்டார கல்வி அலுவலர் அருள் மணி, பெற்றோர்களிடம் பேசி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்ததன் பேரில் பெற்றோர்கள் கலைந்து சென்றனர்.

பள்ளியில் படிக்கும் மாணவிகள் கூறுகையில்: எட்டாம் வகுப்பு வரை உள்ள இந்தப் பள்ளியில் சுமார் 45 மாணவ மாணவிகளே உள்ளோம். சுகாதாரம் இல்லாத சத்துணவு பரிமாறப்படுவதால் வீட்டிலிருந்தே உணவு கொண்டு வந்து சாப்பிடுகிறோம். இதைப் பார்த்த ஆசிரியை சாந்தி "அண்டா குண்டா உடன் வந்து இங்கு உட்கார்ந்து சாப்பிடுகிறீர்களே சோறு திங்கிறீர்களா பீ திங்கிறீர்களா" என மிகவும் கேவலமாக திட்டினார். இதை எங்கள் பெற்றோரிடம் தெரிவித்தோம். எதற்காக இப்படி மாணவிகளை திட்டினீர்கள் என்று கேட்க வந்த எங்கள் பெற்றோர்களையும் தரக்குறைவாக ஆசிரியர் பேசினார்.

மேலும் தமிழக அரசு மாணவிகளுக்கு வழங்கக்கூடிய இலவச நேப்கின், முட்டைகள் அனைத்தையும் அருகில் உள்ள கடைகளுக்கு ஆசிரியர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து விற்று விடுகிறார்கள். எங்களுக்கு எந்த ஒரு சலுகைகளும் இங்கு கிடைப்பதில்லை. சுகாதாரமில்லாத உணவு சுகாதாரம் இல்லாத குடிநீர், முறையாக பள்ளிக்கு வராத ஆசிரியர்கள் என அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் உள்ள நிலையில் எங்கள் பெற்றோரையும் தரக்குறைவாக பேசிய ஆசிரியர் சாந்தி மாற்றப்பட வேண்டும் என்றனர்.

மாணவிகளின் பெற்றோர் கூறுகையில்: தங்களது பிள்ளைகளை ஆசிரியர் தரக்குறைவாக பேசியதாக சொன்னதால் சாதாரணமாக கேட்க தான் வந்தோம், ஆனால் சம்பந்தப்பட்ட ஆசிரியை எங்களையும் தரக்குறைவாக பேசியதால் பிரச்சனை முற்றிவிட்டது. யாரை வேணாலும் கூட்டி வாருங்கள், நானும் என் சொந்தபந்தங்களைகூட்டி வந்து பார்த்துக் கொள்கிறேன் என மிரட்டும் தோணியில் பேசியதால், அனைத்து பெற்றோர்களுக்கும் தெரிந்து இங்கு சிறிய பிரச்சனை, விஸ்வரூபமாக எடுத்துள்ளது. சம்பந்தப்பட்ட ஆசிரியை உடனடியாக மாற்றப்பட வேண்டும் என தெரிவித்தனர். குற்றச்சாட்டு குறித்து சம்பந்தப்பட்ட ஆசிரியர் சாந்தி கூறுகையில்: தன் மீது காழ்புணர்ச்சி காரணமாக இவ்வாறு குற்றச்சாட்டை சுமத்துகின்றனர். நான் எதற்காக நாப்கின் மற்றும் முட்டைகளை விற்கின்றேன். இது பொய்யான குற்றச்சாட்டு என்றார்.

மூன்று மணி நேரமாக நடந்த இந்த விவகாரம், வட்டார வளர்ச்சி அலுவலர் அருள்மணி, தலைமையில் பெற்றோரிடம் பேச்சு வார்த்தை நடத்தி, துறை ரீதியாக சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் மீதும் குற்றச்சாட்டுகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தனர்.

### கடன் தொல்லை காரணமாக

# நாமக்கல்லில் கணவன் மனைவி விஷம் குடித்து தற்கொலை; போலீசார் விசாரணை



நாமக்கல், நவ.28

நாமக்கல் சேலம் சாலை, முதலைப்பட்டி அருகே ராஜீவ்காந்தி நகரை சேர்ந்தவர் குணசேகரன் (50). இவரது மனைவி சந்திரகலா (46). இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர். ஒருவர். திருச்சியில் கல்லூரியில் படித்து வருகிறார். மற்றொருவர் லாரி ஓட்டுநராக வெளியூர் சென்றுள்ளார்.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக கடன் தொல்லை காரணமாக குணசேகரனும் அவரது மனைவி சந்திரகலா மன உலைச்சலுக்கு ஆளாகி உள்ளனர். இதனால் மன வேதனை அடைந்தவர்கள் நேற்றிரவு உணவில் விஷம் கலந்து சாப்பிட்டுள்ளனர். இந்நிலையில் இன்று காலை அண்டை வீட்டினர் குணசேகர் வீட்டு கதவை தட்டி உள்ளனர். திறக்காததால் சந்தேகம் அடைந்தவர்கள் நாமக்கல் போலீஸாருக்கு தகவல் அளித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற போலீஸார் வீட்டை திறந்துபார்த்த போது குணசேகரன் அவரது மனைவி சந்திரகலா உயிரிழந்து கிடந்துள்ளனர். இதனையடுத்து

இறந்து கிடந்த பிரேதத்தை போலீஸார் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றன. இச்சம்பவம் அப்பகுதி மக்களிடயே பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளன.

### வாழப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில்

# முதல் நிலை வருவாய் ஆய்வாளர் கைது

## லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் கையும் காலமாக சிக்கினார்



சேலம், நவ.28

சேலம் மாவட்டம் வாழப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் முதல் நிலை வருவாய் ஆய்வாளராக கார்த்தி என்பவர் பணியாற்றி வருகிறார்.

நிலையில் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு உட்பட்ட பெரிய கவுண்டம் பாளையம் பகுதியைச் சேர்ந்த யோகேஸ்வரன் என்பவர் ஓடைப்பகுதி ஆக்கிரமிப்பை எடுக்க வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்து இருந்தார் இவர் ஒரு தனியார் கம்பெனியில் பணிபுரிவதாக கூறப்படுகிறது

இந்நிலையில் அந்த மனுவின் அடிப்படையில் ஓடை பகுதியில் ஆக்கிரமிப்பை அகற்ற யோகேசஸ்வரனிடம் முதல்நிலை வருவாய் ஆய்வாளர் கார்த்திக் என்பவரின் உதவியாளர் முருகன் மணியின் மூலம் 15000 ரூபாய் லஞ்சம் வாங்கும் பொழுது சேலம் லஞ்ச ஒழிப்பு துறை காவல் ஆய்வாளர் முருகன் தலைமையில் ஏழு பேர் கொண்ட குழுவினர் கையும் காலுமாக பிடித்து கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# டிசம்பர் 15ந்தேதி அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டம்: எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, நவ.29

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அ.தி.மு.க. செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம், கழகசட்டதிட்டவிதிகள் 19 (vii) மற்றும் 25 (ii) ன்படி, வருகின்ற 15.12.2024 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு, சென்னை, வானகரத்தில் உள்ள ஸ்ரீ வாரு வெங்கடாசலபதி பேலஸ் மண்டபத்தில், கழக அவைத் தலைவர் டாக்டர் அ. தமிழ்மகன் உசேன் தலைமையில் நடைபெற உள்ளது.

கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்மற்றும்சிறப்புஅழைப்பாளர்கள்அனைவருக்கும் தனித் தனியே அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள்ஒவ்வொருவரும் தங்களுக்கு அனுப்பப்படும் அழைப்பிதழுடன் தவறாமல் வருகை தந்திட கழக செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இன்னும் 1½ ஆண்டுகளில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ள நிலையில் சட்டசபை தேர் தலை சந்திக்க அனைத்துக் கட்சிகளையும் போல அ.தி.மு.க.வும் தயாராகி வருகிறது.

அந்த வகையில் டிசம்பர் 15ந்தேதிநடைபெறஉள்ள அ.தி.மு.க. செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறி உள்ளது.

இந்த கூட்டத்தில் சட்டசபை தேர்தலை எதிர்கொள்வது பற்றியும், கூட்டணி குறித்தும் பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.

கட்சியின் வளர்ச்சிப் பணிகள் பற்றியும் தீர்மானங்கள் இயற்றப்பட உள்ளது.

அ.தி.மு.க.வில் எடப்பாடி பழனிசாமி தலைமையேற்ற பிறகு அவரது புகைப்படத்துடன் கூடிய உறுப்பினர் அட்டைகள் வழங்கப்பட்டு உள்ளன.

இந்தஅட்டைகள்முறையாக கட்சியினருக்கு சென்று சேரவில்லை என்று எழுந்த புகாரின் பேரில் அதுபற்றி விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய அமைக்கப்பட்ட கள ஆய்வு குழுவினரும் மாவட்ட வாரியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளனர்.

பொதுக்குழு கூடுவதற்கு முன்னதாக அவர்கள் தங்களது அறிக்கையை கட்சி தலைமையிடம் அளிக்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனத்தில் கவர்னரால் இடையூறுகள் ஏற்பட்டு வருகிறது அமைச்சர் கோவி செழியன்

மதுரை, நவ.28




மதுரை அரசு மீனாட்சி கலைக் கல்லூரியில் போதைப் பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது. உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி செழியன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். முன்னதாக கல்லூரி ஆசிரியர்கள் பணியிட மாறுதல் ஆணையை வழங்கினார். பின்னர் அவர் பேசியதாவது:

தமிழ்நாடுமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கு இணங்க அவரது வழிகாட்டுதலின்படி அரசு கலை, அறிவியல், பொறியியல் மற்றும் பலவகை தொழில் நுட்ப கல்லூரிகளின் ஆசிரியர்களுக்கான 202425 ஆண்டுக்கானபணிமாறுதல்திணை வழியாக ஒளிவு மறைவு அற்ற பொது கலந்தாய்வு நடத்த உத்தரவு விடப்பட்டது.

அதன் அடிப்படையில் இணைய வழியாக மனு செய்த 377 ஆசிரியர்களின் மனுக்களில்தகுதி உடைய 198 நபர்களுக்கு பணி மாறுதல் ஆணை இன்று வழங்கப்பட்டுள்ளது.

அதே போல் தொழில் நுட்பக் கல்லூரியில் பணிபுரியும் 285 நபர்களின் மனுக்கள் பெறப்பட்டு தகுதியுடைய 93 பணியிடங்களுக்கு பணி மாறுதல் ஆணையும் இன்று வழங்கப்பட்டது.

இதுவரை இல்லாத நிலையில் ஆசிரியர்களின் கோரிக்கைகளை ஏற்று எந்தவொரு ஒளிவு மறைவு இல்லாதவெளிப்படைத் தன்மையுடன் இந்த அரசு செயல்படுகிறது. பல்கலைக் கழக துணைவேந்தர்கள் நியமனத்தில் கவர்னரால் எந்த அளவுக்கு இடர்பாடுகள் நிலவுகிறது என்பது அனைவருக்கும் தெரியும்.

மாநில உரிமை, பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள் நலனை பேணி காப்பதில் முதல்வர் கவனமாக உள்ளார். அத்துடன் அந்த விஷயத்தில் முதலமைச்சர் கண்ணும் கருத்துமாக இருந்து எங்களுக்கு அறிவுரை கூறி வருகிறார். முதலமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில் விரைவில் துணைவேந்தர் நியமனம் செய்யப்படுவர். அந்த பணியும் விரைவில் நிறைவேற்றப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# 'சமூக நீதி என்பது ஒரு கட்சிக்கு மட்டுமே சொந்தமானது அல்ல' கவர்னர் ஆர்.என்.ரவி

சென்னை, நவ.28

தேசிய அரசியலமைப்பு தினத்தையொட்டி, சென்னைவேலப்பன்சாவடியில் உள்ள தனியார் சட்ட கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக கவர்னர் ஆர்.என். ரவி கலந்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், செய்தித்தாள்களில் சமூகநீதி குறித்த செய்திகள் வருகிறது, ஆனால் குடிநீர் தொட்டியில் ஒரு சமுதாயத்தினர் அருவெறுக்கத்தக்க செயலை செய்துள்ளனர் என்று விமர்சித்தார்.

மேலும் சமூக நீதி என்பது குறிப்பிட்ட இயக்கத்திற்கு, அரசியல் கட்சிக்கு மட்டுமே சொந்தமானது இல்லைஎன்றுகுறிப்பிட்ட ஆர்.என்.ரவி,

அது அனைவருக்கும் கிடைக்கவேண்டியஅடிப்படை உரிமை என்று கூறினார். மொழியை வைத்து சிலர் பிரிவினையில் ஈடுபடுகிறார்கள் என்று குற்றம் சாட்டிய அவர், மொழியினால் ஏற்படும் பிரிவினைவாதம் ஆபத்தானது என்று தெரிவித்தார்.

# கூட்டுறவு சங்கத்தில் தகுதியற்ற 44 லட்சம் உறுப்பினர்கள் அதிரடி நீக்கம்

சென்னை, நவ.28

தேசிய கூட்டுறவு தர தகவலின்படி தமிழகத்தில் கிட்டத்தட்ட 22,110 மாநில அளவிலான சங்கங்கள் மற்றும் 140 பல மாநில சங்கங்கள் உள்ளன.

கடந்த ஆண்டு பிப்ரவரியில் மாநில கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்ஆணையம்வெளியிட்ட சுற்றறிக்கையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 2.23 கோடியாக இருந்தது.

இதற்கிடையே கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நடத்த தி.மு.க. அரசு திட்டமிட்டுள்ளது. இதையொட்டி அதிகாரிகள் உறுப்பினர்கள் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இறந்தவர்கள் மற்றும் மீண்டும் உறுப்பினர்களாக இருக்க தகுதியற்றவர்கள்தொடர்பாகநீக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி கூட்டுறவு சங்கங்களின் பட்டியலில் இருந்து கிட்டத்தட்ட 44 லட்சம் தகுதியற்ற உறுப்பினர்கள் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர். சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

தஞ்சை மாவட்டத்தில் தான் அதிக பட்சமாக 3.23 லட்சம் தகுதியற்ற உறுப்பினர்கள் நீக்கப்பட்டுள்ளனர். அதற்கு அடுத்தப்படியாக மதுரை (2.52 லட்சம்), சேலம் (2.09 லட்சம்), திருச்சி (2.08 லட்சம்), சிவகங்கை (2.03 லட்சம்) ஆகிய மாவட்டங்கள் உள்ளன. பெயர் நீக்கப்பட்டவர்களில் 18 லட்சம் பேர் இறந்தவர்கள் பிரிவின் கீழ் வருகிறார்கள். சுமார் 2 ஆண்டுகளாக ஆதார் எண்ணை வழங்காதவர்களும் நீக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்கள் ஆதார் விவரங்களை அளித்தால் அவர்களை மீண்டும் உறுப்பினராக சேர்த்துக் கொள்வோம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது கூட்டுறவு சங்கங்களில் 1.46 கோடி உறுப்பினர்கள் உள்ளனர். சேலத்தில் அதிகபட்சமாக 10.8 லட்சம் பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதை தொடர்ந்து திண்டுக்கல் (7.12 லட்சம்), கடலூர் (6.66 லட்சம்), திருச்சி (5.92 லட்சம்), கன்னியாகுமரி (5.68 லட்சம்) உள்ளனர்.

மாநிலம் முழுவதும் 34,600 ரேசன் கடைகளை கூட்டுறவு சங்கங்கள் நடத்தி வருகின்றன. வாக்காளர் பட்டியல் திருத்திய பிறகு கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நடைபெறும்.

# ஒழுக்கக்கேடாக நடக்கும் ஆசிரியர்களுக்கு கட்டாய பணி ஓய்வு தனியார் பள்ளி இயக்குனர் எச்சரிக்கை

சென்னை, நவ.28

பள்ளி மாணவியர்களிடம் ஒழுக்கக்கேடான முறையில் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதுடன், தண்டனை வழங்குதல், கட்டாய பணி ஓய்வு, பணி நீக்கம், பணியறவு மற்றும் அவர்களின் கல்விச் சான்றுகளை ரத்து செய்ய பரிந்துரைத்தல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும் என தனியார் பள்ளிகள் இயக்குனர் பழனிச்சாமி அதிரடியாக சுற்றறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து தனியார் பள்ளிகள் இயக்குனர் பழனிச்சாமி அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறி இருப்பதாவது:

தாளாளர்கள் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு போக்சோ சட்டம் பள்ளிகளில் எஸ்.எஸ்.ஏ.சி. அமைப்பு மற்றும் பள்ளிகளில் கல்வி சார், கல்வி இணை நிகழ்வுகளுக்கான வழிகாட்டு நெறி முறைகள் வழக்கப்பட்டு உள்ளது.

பள்ளி மாணவியர்களிடம் ஒழுக்கக் கேடான முறையில் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதுடன் தண்டனை வழங்குதல், கட்டாய பணி ஓய்வு, பணி நீக்கம், பணி யறவு, மற்றும் அவர்களின் கல்விச் சான்றுகளை ரத்து செய்ய பரிந்துரைத்தல் போன்றவை தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பாதுகாப்பு மற்றும் பாலியல் வன்முறையிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுதல் தொடர்பாக வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு, அனைத்து பள்ளிகளிலும் மாணவர் பாதுகாப்பு ஆலோசனைக் குழு ஆணையிடப்பட்டுள்ளது.

அனைத்து பள்ளிகளுக்கும் மாவட்டக்கல்வி அலுவலர்கள் அனுப்பப்பட்டு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பள்ளிகளிலும் வைக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கெதிரான வன்முறைகள் தடுப்பு தொடர்பான தகவல்களை அனைத்து மாணவர்களுக்கும் காலை வழிபாட்டு கூட்டத்தில் ஆசிரியர்கள் விளக்கி கூறுதல் வேண்டும். மாணவர் மனசுப் பெட்டி, 14417 மற்றும் 10980 ஆகிய தொடர்பு எண்கள், மாணவிகள் அறிந்து கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

தமிழ்நாடு தனியார் பள்ளிகள்இயக்குநரின்செயல்முறைகள் என்.எஸ்.எஸ்., என்.சி.சி. ஸ்கவுட்கைடும், ஜே.ஆர்.சி. போம் அமைப்புகள் பள்ளிகளின் செயல்படுத்துவதற்கு முறையானஅனுமதி பெற்றிருத்தல் மற்றும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு நடத்துதல் சார்ந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு குழந்தைகள் பாதுகாப்புச் சட்டம் (போக்சோ) சார்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மேலும், பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு தேசிய குழந்தைகள் நல ஆணையத்தால் குழந்தைகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வெளியிடப்பட்ட யூடியூப் வீடியோஎ. எஸ்.ஓ. பள்ளியில் காண்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மாவட்டக் கல்வி அலுவலர்களால் பள்ளி முதல்வர்களுக்கு நடத்தப்படும் மாதாந்திரக் கூட்டங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

என்.சி.சி. ஜே.ஆர்சி மற்றும் சாரணசாரணியர் இயக்கம் போன்ற அமைப்புகள் செயல்படும் பள்ளிகளை முறையாக கண்காணிக்க வேண்டும். இவ்வமைப்புகள் செயல்படும் பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு உள்ளார்களா என்பதை பள்ளி ஆய்வு மற்றும் ஆண்டு ஆய்வின்போது உறுதி செய்ய வேண்டும். மேலும் போக்சோ சட்டம் குறித்தும் பள்ளி முதல்வர்கள் மூலமாக ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

பள்ளிகளில் கல்வி சார், கல்வி இணை நிகழ்வுகளுக்கான அரசால் வழங்கப்பட்டுள்ள நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்து பள்ளிகளுக்கும் அனுப்பி வைக்கும் பொருட்டு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் (தனியார் பள்ளிகள்) அனுப்பப்பட்டுள்ளது.

ஒரு சில மாவட்டங்களில் இருந்து மாணவிகள் மீது ஒழுக்கக்கேடான செயல்பாடுகள் நடைபெறுவதாக புகார்கள் வரப்பெற்று உள்ளன.

எனவே அனைத்து பள்ளி முதல்வர் , தாளாளர், ஆசிரியர்கள் ஆசிரியரல்லாத பணியார்களுக்கு மாவட்டக் குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர் நலத்துறை அலுவலர்கள் சுகாதாரத்துறை அலுவர்கள் மற்றும் காவல் துறை அலுவலர்கள் ஆகியோர்களைக் கொண்டு பயிற்சி நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அறிவுறுத்தப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வடசென்னை அனல் மின் திட்டப் பணிகள்: ஆய்வு செய்த செந்தில் பாலாஜி

சென்னை, நவ.28



வட சென்னைமிக உய்ய அனல் மின் திட்டம் நிலை 3 ல் நடைபெற்று வரும் திட்டப் பணிகளை மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில்பாலாஜி நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

கடந்த 07.03.2024 அன்று. முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் துவக்கி வைத்த (1X800 மெகாவாட்) வட சென்னை மிக உய்ய அனல் மின் திட்டம் நிலை 3ல் தற்போது சோதனை இயக்கத்திற்கான ஆயத்த பணிகள் நடைபெற்று வருகிறது.

இப்பணிகள் குறித்து விரிவான ஆய்வினை மேற்கொண்ட அமைச்சர் செந்தில்பாலாஜி பொருளாதாரரீதியான மின் உற்பத்தி பணிகளைதுரிதமாக முடித்து, வருகின்ற டிசம்பர் மாத இறுதிக்குள் முழுமையான மின் உற்பத்தியை தொடங்க உரிய அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது, தமிழ்நாடு மின் உற்பத்தி கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் கநத்தகுமார். இயக்குனர் (திட்டம்) கருக்குவேல் ராஜன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# மீனவர்களை பாதிக்கும் கலாச்சார மையம் திட்டத்தை அரசு கைவிட வேண்டும் அன்புமணி ராமதாஸ்

சென்னை, நவ.28



பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

சென்னை கிழக்குக் கடற்கரை சாலையில் திருவிடந்தைக்கு அருகில் 233 ஏக்கர் நிலப்பரப்பில் ஆன்மிகம் மற்றும் கலாச்சார மையம் அமைக்க தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது. இத்திட்டத்திற்கு மீனவ மக்களிடையே கடுமையான எதிர்ப்பு எழுந்தும் கூட அதைப்பற்றி சிறிதும் கவலைப்படாமல் ஆன்மிகமையம்அமைக்க இந்து சமய அறநிலையத்துறையும், சுற்றுலாத்துறையும் துடிப்பது கண்டிக்கத்தக்கது.

ஆன்மிக மையம் அமைக்கவோ, கலாச்சார மையம் அமைக்கவோ பாட்டாளி மக்கள் கட்சி எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. மாறாக, தமிழ்நாட்டின் பூர்வகுடி மக்களான மீனவர்களின் வாழ்வாதாரங்களை அழித்து விட்டு, அந்த மையங்களை அமைக்க வேண்டுமா? என்பது தான் எனது வினா.

ஆன்மிக மற்றும் கலாச்சார மையம் அமைப்பதற்காக தேர்வு செய்யப்பட்டிருக்கும் இடத்தை தான் மீனவர்கள் அவர்களின் படகுகளை நிறுத்துவது, வலைகள் மற்றும் மீன்களை காய வைப்பது போன்றவற்றுக்காக பயன்படுத்தி வந்தனர். இப்போது அங்கு ஆன்மிக மையம் அமைக்கப்பட்டால் மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்படும்.

திருவிடந்தையில் ஆன்மிக மற்றும் கலாச்சார மையம் அமைக்கும் திட்டம் மீனவர்களை மட்டுமின்றி, பேரிடர்களுக்கும் வழி வகுக்கும். ஆன்மிக மையம் அமைக்கப்படுவதற்கு அருகில் உள்ள ஆளவந்தார்அறக்கட்டளைக்கு சொந்தமான நிலங்களில் இயற்கையான மணல் மேடுகள் உள்ளன.

அவை சுனாமி அலைகளைக் கூட தடுக்கும் வல்லமை பெற்றவை. இந்தத் திட்டத்திற்காக அவை அகற்றப்படும் என்று கூறப்படும் நிலையில், சுனாமியிலிருந்து திருவிடந்தை உள்ளிட்ட பகுதிகளுக்கு பாதுகாப்பு கிடைக்காது. அந்தப் பகுதி தான் நிலத்தடி நீர்வளத்தை சேமிக்கும் தளங்களைக் கொண்டிருக்கிறது. இயற்கையையும், மீனவ மக்களின் வாழ்வாதாரத்தையும் சிதைத்து விட்டு ஆன்மிக, கலாச்சார மையம் அமைக்க வேண்டுமா? என தமிழக அரசு சிந்திக்க வேண்டும்.

ஆன்மிக, கலாச்சார மையம் அமைப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி அளிப்பதில் காட்டப்பட்ட அசாத்திய வேகம் பல்வேறு ஐயங்களை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்திற்கானமாநிலஅளவிலான சுற்றுச்சூழல் அனுமதி ஒரே நாளில் வழங்கப்பட்டதாகவும், அதுகுறித்த கூட்டத்தில் மீனவ சமுதாய பிரதிநிதிகள் ஒருவர் கூட அழைக்கப்படவில்லை என்றும் மீனவ அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன. எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் மக்களை பாதிக்கும் வகையில் இருக்கக் கூடாது; உள்ளூர் மக்களால் வரவேற்கப்படும் வகையில் இருக்க வேண்டும். இந்த இரு தகுதிகளையும் பெறாத ஆன்மிக, கலாச்சார மையத்தை திருவிடந்தை பகுதியில் அமைக்கும் திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும்.

இவ்வாறு அவர்கூறியுள்ளார்.

# தருமபுரியில் பா.ம.க.வினர் ஆர்ப்பாட்டம்: 500க்கும் மேற்பட்டோர் கைது

தருமபுரி, நவ.28



தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாசுக்கு வேறு வேலை இல்லை. அதனால் அவர் தினமும் அறிக்கை விட்டுக் கொண்டிருப்பார் என பேசினார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பா.ம.க சார்பில் தருமபுரி கலெக்டர் அலுவலகம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

இதற்கு பா.ம.க கவுரவ தலைவரும், பென்னாகரம் எம்.எல்.ஏ.வுமான ஜி.கே. மணி தலைமையில் நிர்வாகிகள் கருப்பு கொடி ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திடீரென பா.ம.கவினர் மறியலுக்கு முயன்றனர். அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தினர். அப்போது அவர்கள் பல்வேறு கோஷங்களை எழுப்பி போராட்டம் நடத்தினர்.

பின்னர் போலீசார் பா.ம.க. எம்.எல்.ஏக்கள். ஜி.கே. மணி, வெங்கடேஸ்வரன் மற்றும் ஏராளமான பா.ம.க.வினரை கைது செய்து வேனில் ஏற்றிச் சென்று மண்டபத்தில் தங்க வைத்து உள்ளனர். இதில் 500க்கு மேற்பட்டோர் கைது செய்து உள்ளதாக போலீசார் தெரிவித்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டு உள்ளது. இதேபோல் கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் பா.ம.க.வினர் ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் பா.ம.க. நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# ராமேஸ்வரத்தில் 60 கி.மீ. வேகத்தில் சூறைக்காற்று: ஆக்ரோஷமாக எழும் ராட்சத அலைகள்



மண்டபம், நவ.28

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று புயலாக மாறுகிறது. வடகிழக்கு பருவ மழையுடன் புயலும் சேர்ந்ததால் தமிழகம் முழுவதும் பரவலாக பலத்த மழை பெய்து வருகிறது.

குறிப்பாக கடலோர மாவட்டங்களில் வெளுத்து வாங்கும் மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரம், பாம்பன், தங்கச்சிமடம், மண்டபம் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த வாரம் மேக வெடிப்பு காரணமாக ஒரே நாளில் 44 செ.மீ. மழை பதிவானது.

ராமேசுவரத்தை புரட்டிப்போட்ட இந்த மழை பாதிப்பில் இருந்து மக்கள் சற்று மீண்டு வந்த நிலையில், புயல் சின்னம் காரணமாக நேற்று முதல் மீண்டும் பலத்த மழை பெய்து வருகிறது.

வானிலை ஆய்வு மைய எச்சரிக்கை எதிரொலியாக பாக்ஜலசந்தி, மன்னார் வளைகுடாகடல்பகுதியில் மீன்பிடிக்க செல்ல மீனவர்களுக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. இதனால் ராமேசுவரம், தங்கச்சிமடம், பாம்பன், மண்டபம் மீன்பிடி இறங்குதளங்களில் சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசைப்படகு மற்றும் நாட்டுப்படகுகள் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டுள்ளன.

கடுமையான பனி மூட்டத்துடன் பலத்த மழையும் பெய்து வருவதால் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை வீடுகளுக்குள் முடங்கினர். சாலைகளில் மக்கள் நடமாட்டம் குறைந்து வெறிச்சோடியது.

அரிச்சல் முனை, தனுஷ்கோடி, முகுந்தராயர்ச த்திரம், கோதண்டராமர் கோவில், ராமர்பாதம், பாம்பன் பாலம் உள்ளிட்ட பகுதிகளில் கனமழை காரணமாக சுற்றுலாப் பயணிகள் வருகை வெகுவாக குறைந்தது.

குந்துகால் முதல் குருசடைதீவு வரையில் இயக்கப்படும் சுற்றுலா படகு போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. அக்னி தீர்த்தக்கடல் பகுதியில் கடல் நீர்மட்டம் உயர்ந்தது.

தனுஷ்கோடி, குந்துகால் கடல் பகுதி, பாம்பன் ஆகிய இடங்களில் அலைகளின் சீற்றம் மிகவும் ஆக்ரோஷமாக காணப்பட்டது. அதிலும் பாம்பன் புதிய ரெயில் பாலத்தில் பல மீட்டர் உயரத்திற்கு ராட்சத அலைகள் எழுந்து தாக்கியது.

சேராங்கோட்டை கடற்கரைபகுதியில்மண்அரிப்பு ஏற்பட்டதால் கரையில் நிறுத்தப்பட்டிருந்த நாட்டுப் படகுகள் மீண்டும் கடலில் இழுக்கப்பட்டன. அத்துடன் கடற்கரையை ஒட்டிய மீனவர் குடியிருப்புகளையும் கடல் நீர் சூழ்ந்தது. இதனால் அங்கு வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

தமிழகத்தை நோக்கி வேகமாக நகர்ந்து வரும் புயலால் ராமேசுவரம் கடலில் இன்று மணிக்கு 55 முதல் 63 கி.மீ. வேகத்தில் பலத்த சூறைக்காற்று வீசக்கூடும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

அதற்கேற்க இன்று காலை முதலே பாம்பன் உள்ளிட்ட பகுதிகளில் 60 கி.மீ. வேகத் தில் சூறாவளி காற்று வீசியது. தொடர்ந்து மழையும் பெய்து வருவதால் கடற்கரை வெறிச்சோடியது. நேற்று காலை 6 மணி முதல் இன்று காலை 6 மணி வரை ராமநாதபுரம் மாவட்டத்தில் 54 செ.மீ. மழை பதிவாகிள்ளது.

# ராமநாதபுரத்தில் தொடர் கனமழையால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



ராமநாதபுரம்,நவ.28

ராமநாதபுரத்தில் வடகிழக்கு பருவமழை கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வருகிறது. குறிப்பாக கடந்த வாரம் கன மழை கொட்டி தீர்த்தது. ராமேசுவரத்தில் மட்டும் 44 செ.மீட்டர் மழை பதிவானது.

இந்த நிலையில் வங்க கடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக ராமநாதபுரம் மாவட்டத்தில்கடந்த2நாட்களாக மிதமான மழை பெய்து வருகிறது.

ராமநாதபுரம் நகரில் நேற்று காலை முதல் இன்று காலை வரை தொடர்ந்து சாரல் மழையும், அவ்வப்போது மிதமான மழை பெய்தது. இதனால் நகர், புறநகர் பகுதிகளில் தாழ்வான இடங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது.

இதேபோல் மாவட்டத்தில் மண்டபம், தங்கச்சிமடம், ராமேசுவரம், பாம்பன், திருவாடானை, ஆர்.எஸ்.மங்கலம், பரமக்குடி, முதுகுளத்தூர், கமுதி, கடலாடி உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 24 மணி நேரத்தில் கனமழை கொட்டி தீர்த்தது. இதனால் பல இடங்களில் மழை நீர் தேங்கியது. சில இடங்களில் மரங்கள் முறிந்து மின்தடையும் ஏற்பட்டது.

கடந்த 2 நாட்களாக மாவட்டம் முழுவதும் பெய்து வரும் மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் தொடர் கனமழையால் ராமநாதபுரம் மாவட்டத்தில் இன்று பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளித்து மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் உத்தரவிட்டுள்ளார்.

கடலோர பகுதிகளில் குளிர்ந்த காற்று வீசுகிறது. ரோடுகள் சேறும் சகதியுமாகியுள்ளதால் வாகன ஓட்டிகள் அவதிக்குள்ளாகினர். மழைகால காய்ச்சல், தலைவலி, இருமல் என பல்வேறு நோய்களுக்கு ஆளாகி பொதுமக்கள் ராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையை நோக்கி படையெடுக்க தொடங்கி விட்டனர்.

கடந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் பெய்த மழையின் அளவு மில்லி மீட்டரில் வருமாறு:

ராமநாதபுரம்22, மண்டபம்44.80, ராமேசுவரம்48, பாம்பன்46.10, தங்கச்சி மடம்62.20, பள்ளமோர்குளம்15.20, திருவாடானை37, தொண்டி 34.60, வட்டாணம்45.20, தீர்த்தண்டதானம்48.60, ஆர்.எஸ்.மங்கலம்29, பரமக்குடி 25.40, முதுகுளத்தூர்18, கமுதி 26, கடலாடி20, வாலிநோக்கம்20.

மாவட்டத்தின் மொத்த மழை அளவு 542.10 மி.மீட்டர் ஆகும்.

இன்றும், நாளையும் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்யும் என வானிலை எச்சரிக்கைவிடுத்துள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் பல்வேறு பகுதிகளில் மிதமான மழை பெய்தது. குறிப்பாக தேவகோட்டை, காரைக்குடி, சிவகங்கை நகர் பகுதிகளில் சாரல் மழை பெய்தது. இன்று காலை முதல் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.

கனமழை எச்சரிக்கையால் சிவகங்கை மாவட்டத்தில் கனமழை எச்சரிக்கையால் பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை அளிக்கப்பட்டது.

# டிசம்பர் 2வது வாரத்தில் போக்குவரத்து ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தை?

சென்னை, நவ.28

போக்குவரத்து ஊழியர்களுக்கு முழுமையாக ஓய்வு கால பலன்களை வழங்க வேண்டும். டிரைவர்கண்டக்டர் (டி அண்ட் சி) என நியமிக்காமல், இரு பணிகளுக்கும் தனித்தனியே ஊழியர்களை நியமிக்க வேண்டும். தனியார் பஸ்களை வாடகைக்கு எடுத்து இயக்குவதை கைவிட வேண்டும்.

வரவுக்கும் செலவுக்குமான வித்தியாசத் தொகையை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போக்குவரத்துக் கழக தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் தொ.மு.ச. பேரவை பொருளாளர் கி.நடராஜன், சி.ஐ.டி.யு. பொதுச்செயலாளர் கே.ஆறுமுகநயினார் உள்ளிட்ட நிர்வாகிகள், சென்னை தலைமைச் செயலகத்தில் போக்குவரத்துத்துறை கூடுதல் தலைமைச் செயலர் க.பணீந்திர ரெட்டியை சந்தித்தனர்.

அப்போது, ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தையை டிசம்பர் 2வது வாரத்துக்குள் நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்றும், ஓய்வு கால பணப்பலன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் போக்குவரத்துத்துறை செயலாளர் தெரிவித்து உள்ளார். மேலும் அரசின் பண உதவியை பெற்று அகவிலைப்படி உயர்வு வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும், வரவுசெலவுக்கு இடையேயான வித்தியாசத் தொகை தொடர்பான கோப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்றும் சங்க நிர்வாகிகளிடம் போக்குவரத்துத்துறை செயலாளர் தெரிவித்து உள்ளார்.

# இந்திய வரலாற்றைப் புரட்டிபோட்ட புரட்சியாளர் சமூகநீதிக் காவலர் வி.பி.சிங்: மு.க.ஸ்டாலின்




சென்னிய, நவ.28

முன்னாள் பிரதமர் வி.பி.சிங்கின் நினைவு நாள் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

இந்திய வரலாற்றைப் புரட்டிபோட்ட புரட்சியாளர் சமூகநீதிக்காவலர் வி.பி.சிங் அவர்களின் புகழ் ஓங்குக!

உயர்கல்வியிலும் வேலைவாய்ப்புகளிலும் தலைமைப் பொறுப்புகளிலும் நமது திறமையால் சாதனை படைத்து அவருக்கு நன்றி செலுத்துவோம்! சாதிக்கப் பிறந்தவர்களுக்குச் சாதி தடையில்லை என்பதை நிறுவுவோம்! என்று தெரிவித்துள்ளார்.

# ராஜ்குமார் ஹிரானியுடன் மீண்டும் இணையும் விக்கி கவுசல்?



பிரபல பாலிவுட் நடிகரான விக்கி கவுசல், தற்போது சஞ்சய் லீலா பஞ்சாலி இயக்கத்தில் 'லவ் அண்ட் வார்' படத்திலும், லக்சுமன் உடேகர் இயக்கும் 'சாவா' படத்தில் ராஷ்மிகா மந்தனாவுக்கு ஜோடியாகவும் நடித்து வருகிறார். இதில், 'லவ் அண்ட் வார்' படம் 2026ம் ஆண்டு மார்ச் 20ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

மறுபுறம் 'சாவா' படம் அடுத்த மாதம் 6ம் தேதி வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தநிலையில், 5ம் தேதி அல்லு அர்ஜுன் நடித்துள்ள புஸ்பா 2 படம் வெளியாவதால் ரிலீஸ் ஒத்திவைக்கப்பட்டது. இப்படங்களைத்தொடர்ந்து, அமர் கவுசிக் இயக்கும் 'மகாவதாரம்' படத்திலும் விக்கி கவுசல் நடித்து வருகிறார்.

இந்நிலையில், விக்கி கவுசலின் அடுத்த படம் தொடர்பான தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, பிரபல இயக்குனர் ராஜ்குமார் ஹிரானி இயக்கத்தில் விக்கி கவுசல் நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. தற்போது, ஸ்கிரிப்ட் பணிகள் நடைபெற்றுவருவதாக தெரிகிறது. விரைவில் இதன் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

விக்கி கவுசல் நடிப்பில் கடந்த ஆண்டு வெளியாகி மிகப்பெரிய ஹிட் அடித்த 'டுன்கி' படத்தை ராஜ்குமார் கிராணி இயக்கி இருந்தார். தற்போது இருவரும் மீண்டும் இணைய இருப்பதால் அவரது ரசிகர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

# நடிகை ஜோதிகா திருப்பதியில் சாமி தரிசனம்



தென்னிந்திய சினிமாவில் பிரபல நடிகரான சூர்யா சிறுத்தை சிவா இயக்கத்தில் 'கங்குவா'படத்தில்நடித்திருந்தார். கடந்த 14ந்தேதி வெளியாஇப்படம்கலவையான விமர்சனங்களையேபெற்றது. பலர்இப்படத்தின்மீதுஎதிர்மறையானவிமர்சனத்தை முன்வைத்து வந்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஜோதிகா பதிவு ஒன்றை பதிவு செய்தார். அப்பதிவு இணையத்தில் வைரலானது.

அதனை தொடர்ந்து நடிகர் சூர்யா கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் தனது 44வது படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படம் விரைவில் உள்ளது. அதை தொடர்ந்து ஆர்.ஜே பாலாஜி இயக்கும் 'சூர்யா 45' திரைப்படத்தில் நடிக்கவுள்ளார். இந்த படத்தின் படப்பிடிப்பிற்கான பூஜை இன்று மாசாணியம்மன் கோவிலில் நடைபெற்றது.

இதற்கிடையில் சூர்யா மற்றும் ஜோதிகா இருவரும் இணைந்து கர்நாடகாவில் உள்ள மூகாம்பிகை கோவிலில் சாமி தரிசனம் செய்திருப்பதுடன் சிறப்பு யாகமும் நடத்தியுள்ளனர். அப்பொழுது எடுக்கப்பட்ட புகைப்படம் இணையத்தில் வைரலானது.

அதனை தொடர்ந்து தற்போது நடிகை ஜோதிகா திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சாமி தரிசனம் செய்துள்ளார். சாமி தரிசனம் செய்துவிட்டு வந்த நடிகை ஜோதிகாவுடன் ரசிகர்கள் புகைப்படம் எடுத்துக்கொண்டார். அப்போது ரசிகர் ஒருவர் சாமியின் புகைப்படத்தை பரிசாக வழங்கினார். இதுதொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

# ஓ.டி.டியில் வெளியானது ருக்மணி வசந்த் தெலுங்கில் அறிமுகமான படம்



'சப்த சாகர தாச்சே எல்லோ' படத்தின் மூலம் பிரபலமான ருக்மணி வசந்த், சமீபத்தில் வெளியான 'பஹீரா' படத்தில் நடித்திருந்தார். இப்படத்தைத்தொடர்ந்து, சிவராஜ்குமாருடன் 'பைரதி ரணகல்' என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார்.

இப்படம் 2017ம் ஆண்டு பிளாக்பஸ்டர் ஹிட்டான 'முப்தி' படத்தின் தொடர்ச்சியாகும். இதில், சிவராஜ்குமார் வழக்கறிஞராகவும், ருக்மணி வசந்த் மருத்துவராகவும் நடித்துள்ளனர். மேலும், தமிழில் விஜய் சேதுபதி நடிக்கும் 'ஏஸ்' படத்திலும், சிவகார்த்திகேயன் ஏ.ஆர் முருகதாஸ் கூட்டணியில் உருவாகும் புதிய படத்திலும் ருக்மணி வசந்த் நடித்து வருகிறார்.

கன்னடம் மற்றும் தமிழ் படங்களைத்தொடர்ந்து, தெலுங்கிலும் சமீபத்தில் ருக்மணி வசந்த் அறிமுகமானார். அதன்படி, இவர் தெலுங்கில் நடித்த முதல் படம் 'அப்புடோ இப்புடோ எப்புடோ'. நிகில் சித்தார்தா கதாநாயகனாக நடித்த இப்படத்தை சுதீர் வர்மா இயக்கி இருந்தார்.

கடந்த 8ம் தேதி திரையரங்குகளில் வெளியான இப்படம் விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் வரவேற்பை பெறவில்லை. இந்நிலையில், இப்படம் இன்று அமேசான் பிரைம் ஓ.டி.டி தளத்தில் வெளியாகி இருக்கிறது.

# ஜிம்பாப்வேவுக்கு எதிரான ஒருநாள் தொடர்; பாகிஸ்தான் முன்னணி வீரர்கள் விலகல்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தற்போது ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில்நடைபெற்றுவரும்ஒருநாள்தொடரில்இருஅணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றுள்ளன. இதனால் தொடர் 11 என சமனில் உள்ளது. ஒருநாள் தொடர் யாருக்கு என்பதை தீர்மானிக்கும் 3வது மற்றும் கடைசி போட்டி நாளை நடைபெறுகிறது.

ஒருநாள் தொடரை அடுத்து டி20 போட்டிகள் தொடங்குகின்றன. இந்நிலையில், ஜிம்பாப்வேவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இருந்து பாகிஸ்தான் முன்னணி வீரர்களான அகமது டேனியல் மற்றும் ஷாநவாஸ் தஹானி ஆகியோர் விலகி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சியின் போது ஏற்பட்ட காயம் காரணமாக அவர்கள் இருவரும் தொடரில் இருந்து விலகி உள்ளதாக கூறப்படுகிறது. அவர்களுக்கு பதிலாக அப்பாஸ் அப்ரிடி மற்றும் ஜஹந்தத் கான் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# டெஸ்ட் பேட்ஸ்மேன்கள் தரவரிசை பட்டியலில் 2வது இடத்திற்கு முன்னேறிய ஜெய்ஸ்வால்



ஐசிசி எனப்படும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வாரம்தோறும் டெஸ்ட், ஒருநாள், டி20 அணிகள், வீரர்கள், வீராங்கனைகளின் தரவரிசை பட்டியலை வெளியிட்டு வருகிறது.

அந்தவகையில், டெஸ்ட், ஒருநாள், டி20அணிகள், வீரர்கள், வீராங்கனைகளின் தரவரிசை பட்டியலை ஐசிசி இன்று வெளியிட்டுள்ளது.அதில்,சர்வதேசடெஸ்ட்பேட்ஸ்மேன்கள் தரவரிசை பட்டியலில் இந்திய வீரர் யஷஸ்வி ஜெய்ஸ்வால் 2ம் இடம் பிடித்துள்ளார். 825 புள்ளிகள் பெற்ற ஜெய்ஸ்வால் 2ம் இடத்திற்கு முன்னேறியுள்ளார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட்டின் 2வது இன்னிங்சில் ஜெய்ஸ்வால் 161 ரன்கள் குவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை,இங்கிலாந்துவீரர்ஜோரூட்903புள்ளிகளுடன் டெஸ்ட் பேட்ஸ்மேன்கள் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட்டின் 2வது இன்னிங்சில் சதம் விளாசிய இந்திய வீரர் விராட் கோலி டெஸ்ட் பேட்ஸ்மேன்கள் தரவரிசையில் 9 இடங்கள் முன்னேறி 13வது இடம் பிடித்துள்ளார்.

# ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2வது டெஸ்ட்: சுப்மன் கில் பங்கேற்பது சந்தேகம்..?

இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையே பெர்த்தில் நடந்த முதல் டெஸ்டில் இந்தியா 295 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்தியாஆஸ்திரேலியா அணிகள் மோதும் 2வது டெஸ்ட் போட்டி டிசம்பர் 6ந் தேதி பகல்இரவாக அடிலெய்டுவில் தொடங்குகிறது. இந்த டெஸ்டுக்கு முன்பு இந்திய அணி ஆஸ்திரேலிய பிரதமர் லெவலுடன் 2 நாள் பயிற்சி ஆட்டத்தில் விளையாடுகிறது.

இந்தப் போட்டி வருகிற 30 மற்றும் 1ந் தேதிகளில் கான்பெராவில் நடக்கிறது. இடது கட்டை விரலில் ஏற்பட்ட காயம் காரணமாக இந்திய வீரர் சுப்மன்கில் முதல் டெஸ்டில் விளையாடவில்லை. இந்நிலையில், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டியிலும் அவர் பங்கேற்பது சந்தேகம் எனதகவல் வெளியாகி உள்ளது. சுப்மன்கில்லின் காயம் இன்னும் முமையாக குணமாகவில்லை என்றும், காயம் குணமாக 10 முதல் 14 நாட்கள் வரை ஆகலாம் என கூறப்படுகிறது. இதன் காரணமாக ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டியிலும் சுப்மன் கில் பங்கேற்க மாட்டார் என கூறப்படுகிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.